**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**<u>இயல்பு கூட்ட நடவடிக்கைகள்</u>**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 31.10.2019 வியாழக் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்பு கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை திரு.கே.அருள்முருகன்,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 1 | நகராட்சி ஆணையர் அவர்களின் அக்டோபர்-2019 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** பதிவு செய்யலாம். | **95** | **பதிவு செய்யப்பட்டது** |
| 2 | இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வந்த பெரிய கொசு ஒழிப்பு புகை மருந்து தெளிப்பான் இயந்திரத்தில் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால், இயக்க முடியாத நிலை உள்ளதாலும், இந்நகராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்படும் தினசரி டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி பணியின் அவசர அவசியம் கருதி பழுதுகளை நீக்கம் செய்து தரும் பணிக்கு இவ்வலுவலக குறுகிய கால விலைப்புள்ளி கடிதம் ந.க.எண்.2529/2019/எச்1 நாள் 16.09.2019-ன்படி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது. | **96** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>Mega Type Fogging Machine–ல் முழுவதுமாக சர்வீஸ் செய்து பழுதடைந்த பாகங்களை புதியதாக மாற்றி சீர் செய்து தரும் பணிக்கு லேபர் சார்ஜ் உட்பட ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>M/S. SKS Sayee Agency, 14.Mangalapuram 2nd Street, West Tambaram, Chennai-45.</td><td>15715/-</td></tr>
<tr><td>2.</td><td>M/S. OM Sakthi Tech Services,<br>No.2 Wireless station<br>Cross street, Porur, Chennai-125.</td><td>17850/-</td></tr>
<tr><td>3.</td><td>Karthiga system Engineering,<br>T-191. Kattapomman street.<br>Pari Nagar, Ashok Nagar, Chennai 83.</td><td>19600/-</td></tr>
</table>
<br>
அலுவலக குறிப்பு:<br>
1. மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான தொகைக்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 1-ல் கண்டுள்ள M/S. SKS Sayee Agency சென்னை நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.<br>
2. மேற்படி செலவின தொகை ரூ.15715/-ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3. பொதுசுகாதாரம் டெங்க காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணியின் அவசர கால அவசிர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி பொதுசுகாதார ஆய்வர் மற்றும் ஆணையர் (பி) அவர்களின் முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/S. SKS Sayee Agency சென்னை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>
<u>(ந.க.எண்.2529/2019/எச்1)</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>3</td>
<td>இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு டெங்கு தடுப்பு பணியினை மேற்கொள்வதற்கு கொசு ஒழிப்பு புகை மருந்து தெளிப்பான் இயந்திரம் போதுமானதாக இல்லாத காரணத்தால் கூடுதலாக இரண்டு எண்ணிக்கை பல்ஸ்பாக் புகை மருந்து தெளிக்கும் இயந்திரம் புதியதாக வாங்கி கொள்ளவும், இதற்காகும் உத்தேச செலவின தொகை ரூ.2.50ஆகும் இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.</td>
<td>97</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதியளிக்கலாம்.
2. இந்நகர பொதுமக்களுக்கு டெங்கு நோய் வராமல் தடுப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும் பொருட்டு டெங்கு தடுப்பு பணிக்கு பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி சுகாதார ஆய்வாளர் மற்றும் ஆணையர் (பி) அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதையும் மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.2699/2019/எச்1)**

</td><td></td><td></td></tr>
<tr><td>4</td><td>

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவிற்கு டெங்கு தடுப்பு பணிக்கு தேவையான Portable type fogging machine சப்ளை செய்யும் பணிக்கு 15.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<table>
<tr><td rowspan="2">வ.எ.</td><td rowspan="2">நிறுவனத்தின் விபரம்</td><td colspan="3">Supply of 5 Liter capacity portable type fogging machine 1 No.</td><td rowspan="2"></td></tr>
<tr><td>CGST 9%</td><td>SGST 9%</td><td>Total</td></tr>
<tr><td>1.</td><td>M/S.N.R.Traders,<br>22A. EBColony,<br>TVS Nagar,<br>Edayarpalayam,<br>Coimbatore-25</td><td>8370</td><td>8370</td><td>109740</td><td>93000</td></tr>
<tr><td>2.</td><td>M/S.Marudhamalai Agencies,<br>134/4.Dr.Narayanan street,<br>S.S. Kulam (Po),<br>Coimbatore 641 107</td><td>0</td><td>18900</td><td>123900</td><td>105000</td></tr>
</table>

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1-ல் கண்டுள்ள M/S.N.R.Traders கோவை நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியில் (ஒன்றுக்கு) குறைவான

</td><td>

**98**

</td><td>

**அலுவலக குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது**

</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | தொகைக்கு சப்ளை செய்திட அளிக்கப்பட்டுள்ளதால் இதனை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2. டெங்கு தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று M/S.N.R.Traders கோவைநிறுவனத்திற்கு சப்ளை உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.<br><br>3. மேற்படி போக்கிங் மெஷின் இயந்திரம் கொள்முதல் செய்தமைக்கு பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2699/2019/எச்1)** | | |
| 5 | இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் 22235/2019 மூலம் திரு.ஜே.தினகரன், 199/3, மன்னை ரஸ்தா எடத் தெரு என்பவர் புறம்போக்கு நிலம் தொடர்பாக வழக்கு தொடுத்துள்ளார். எனவே, மேற்கண்டுள்ள வழக்கில் இந்நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கு நடத்திட சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.வி.ஜெயபிரகாஷ் நாராயணன் (அரசு வழக்கறிஞர்) அவர்களை நியமனம் செய்திடவும், மேற்கண்டுள்ள வழக்கு தொடர்பாக ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/- செலவு செய்துகொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2. மேற்கண்டுள்ள சென்னை உயர்நீதிமன்ற வழக்கிற்கு ஆகும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்துக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2703/2019/எப்1)** | **99** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |
| 6 | திருத்துறைப்பூண்டி நகராட்சியின் 2018-19 ஆம் ஆண்டிற்கான ஆண்டு கணக்குகள் உரிய இணைப்புகளுடன் (Annual Accounts ) தயார் செய்து கொடுத்த வகையில் திரு.ஜி. செல்வராஜ் அவர்கள் ரூ.25000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) வழங்க கோரியுள்ளார். எனவே, அன்னாருக்கு மேற்படி தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 1051/19/பி1) | **100** | **அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr>
<td>7</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி மற்றும் தனியார்களுக்குப் பாத்தியப்பட்ட கட்டிடங்கள் மற்றும் நிலத்தில் வைக்கப்படும் விளம்பர பலகை மற்றும் விளம்பர பலகை அல்லாத விளம்பரங்கள் தட்டிகள், பேனர்கள் மற்றும் சுவர் விளம்பரங்கள் போன்றவற்றிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை எண் 47 நாள் 26.06.2003 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண் 184 பாகம்-III பிரிவு எண் 1(எ) நாள் 26.06.2003-ல் விளம்பர பலகைகள் அனுமதி விளம்பர வரி விதித்தல் மற்றும் வசூலித்தல் விதிகள் 2003-ல் திருத்தங்கள் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC-1) துறை அரசாணை எண் 17 நாள் 31.01.2019 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் பாகம்-III பிரிவு எண் 1(எ)தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் விளம்பர பலகைகள் உரிமம் வழங்குதல் வசூல் செய்தல் விதிகள் 2003 என திருத்தம் செய்யப்பட்டு நகரிலுள்ள ARTERIAL ROADS மற்றும் பிரதான சாலைகள், தெருக்கள் மற்றும் இதரப் பகுதிகளில் அமையும் விளம்பரத்திற்கு தக்கவாறும், இடத்திற்கு தக்கவாறும் மற்றும் விளம்பர பலகை அமையும் சாலையின் அகலத்திற்கு தக்கவாறும் வைக்கப்படும் விளம்பர பலகைகள் உரிமம் கட்டணம், விண்ணப்ப கட்டணம் திருத்தப்பட்ட விதிகளின்படி மற்றும் வாடகை வசூல் செய்தல் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
<br><br>
<u>திருத்துறைப்பூண்டி நகராட்சி பகுதிகள்</u>
<br><br>
(அ) விதி 6-ல் துணை விதி (1)ன்படி விளம்பரப் பலகைகள் நிறுவுதல் அதிகபட்ச அளவுகளுக்கான அட்டவணை கீழ்க்கண்டவாறு:-
<br><br>
<table>
<tr><th>வ.எ.</th><th>சாலை அகலம்/ சாலை பாதைகள்</th><th>அதிகபட்ச அளவு</th><th>சாலைகள் சந்திப்பிலிருந்து நிறுவுதல் துரரம்</th></tr>
<tr><td>1</td><td>எந்த ஒரு சாலையில் உள்ள கடைகள்</td><td>3 அடி x கடைகளின் அகலம்</td><td>பொருந்தாது (Not applicable )</td></tr>
<tr><td>2</td><td>50 அடி/4 பாதைகள் (Lanes)</td><td>20 அடி x 10 அடி</td><td rowspan="2">100 மீட்டர்</td></tr>
<tr><td>3</td><td>80 அடி/6 பாதைகள் (Lanes)</td><td>30 அடி x 15 அடி</td></tr>
<tr><td>4</td><td>120 அடி/அதற்கு மேலும்</td><td>40 அடி x 20 அடி</td><td></td></tr>
</table>
<br>
(ஆ) விளம்பர பலகை உரிமம் வழங்க மறுக்கப்படும் பட்சத்தில் அரசிற்கு மேல் முறையீடு செய்ய மற்றும் உரிமம் புதுப்பிக்க விதி எண் 11-ன்படி கட்டணம் ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்).
</td>
<td>101</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்க ப்பட்டது</td>
</tr>
</table>

(இ) புதிதாக சேர்க்கப்பட்டுள்ள விதி எண் 12 துணை விதி (i)ன்படி உரிமம் வழங்க மற்றும் புதுப்பிக்க விண்ணப்ப படிவம் கட்டணம் ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்).

(ஈ) விதி எண் 4-ல் உரிமம் வழங்கும் கால அளவினை 31-வது நாள் மார்ச் மூன்றாவது வருடம் என்பதை 3 வருடங்கள் என திருத்தம் செய்யப் பட்டுள்ளது.

(உ) விதி எண் 13-ன்படி விளம்பர பலகைகள் நிறுவுதல் உரிமக்கட்டணம்.

1. பேருந்துகள் செல்லும் முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைகள் மெயின்ரோடு, நகராட்சி மற்றும் மத்திய மாநில அரசிற்கு சொந்தமான சாலைகளில் விளம்பர பலகைகள் நிறுவ உரிமக் கட்டணம் சதுர மீட்டர் ஒன்றிற்கு ரூ.6000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்).

2. நகரிலுள்ள இதர சாலைகள் மற்றும் தெருக்களில் விளம்பர பலகைகள் நிறுவ உரிமக் கட்டணம் சதுர மீட்டர் ஒன்றிற்கு ரூ.6000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்).

திருத்துறைப்பூண்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு செர்ந்தமான பேருந்து நிலையங்கள், பூங்காக்கள், சந்தைகள் வணிக வளாகங்கள், இதர கட்டிடங்கள் மற்றும் நகராட்சி நிலங்கள் ஆகிய பகுதிகளில் நிறுவப்படும் விளம்பர பலகை அமையும் பரப்பளவிற்கு ஏற்றவாறு ஒரு சதுர மீட்டருக்கு ஒரு வருடத்திற்கு நில வாடகை நிர்ணயம் செய்ய மேற்கண்ட விதிகள் 2003 பிரிவு 7(2)-ன்கீழ் நகர்மன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், ஒரு சதுர மீட்டருக்கு, ஒரு ஆண்டிற்கு கட்டணம் குறைந்தபட்சம் ரூ.4000/- அதிக பட்சம் ரூ.6000/- என நிர்ணயம் செய்யலாம்.

மேற்கண்டுள்ள அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விளம்பரங்கள். விளம்பர பலகைகள் அமைத்தல் (முறைப்படுத்துதல்) நிறுவ இடங்கள் தேர்வு செய்தல் மற்றும் நடைமுறைகள் தொடர்பான கொள்கை முடிவுகளை (Outdoor Advertising Policy) செயல்படுத்துவதற்கு கீழ்க்கண்டுள்ளவாறு விளம்பரங்கள் முறைப்படுத்துதல் குழு (Advertisement Regulatory Committee ) அமைத்திடவும்,

| வ.எண். | விளம்பரங்கள் முறைப்படுத்துதல் குழு உறப்பினர்கள் |
|---|---|
| 1 | நகராட்சி ஆணையர் |
| 2 | நகராட்சி பொறியாளர் |

| | | | |
|---|---|---|---|
| | | | |

| | |
|---|---|
| 3 | காவல் ஆய்வாளர் (போக்குவரத்து) |
| 4 | காவல் ஆய்வாளர் (சட்டம் (ம) ஒழுங்கு) |
| 5 | நகரமைப்பு ஆய்வாளர் |

மேலும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் மற்றும் துணை விதிகள் ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கும் உத்தேச செலவினம் ரூ.50000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC-1) துறை அரசாணை எண் 17 நாள் 31.01.2019ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி தமிழ்நாடு அரசிதழ் பாகம்-III பிரிவு எண் 1(எ) தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் விளம்பர பலகை உரிமம் வழங்குதல் கட்டணம், விண்ணப்ப கட்டணம், புதுப்பித்தல் கட்டணம் மற்றும் வருடாந்திர வாடகை வசூல் செய்தல் சம்மந்தமாக திருத்தப்பட்ட விதிகளின்படி மேற்காண் பொருளில் கண்டவாறு திருத்துறைப் பூண்டி நகராட்சிப் பகுதியில் வைக்கப்படும் விளம்பர பலகைகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட திருத்திய கட்டணங்களை 01.12.2019 முதல் வசூல் செய்வதற்கும், அதற்கான செலவின தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /19/எப்-1)

ஒம்/கே.அருள்முருகன்,
ஆணையர்(கூ.பொ.) (ம)
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/